காலாண்டுத் தேர்வு – செப்டம்பர் 2017
பத்தாம் வகுப்பு – தமிழ் முதல் தாள்
விடைக்குறிப்புகள்

1. ஆ. திருவள்ளுவமாலை
2. ஆ. பாரதிதாசன்
3. ஆ. பெரிய புராணம்
4. இ. சொத்துரிமை
5. இ. பாவாணார்
6. அ. அறிஞர் அண்ணா

7. சடையப்ப வள்ளல்
8. கோப்பெருஞ்சோழனின்
9. தேவாரம்
10. நகர்த்தும் வண்டியில்
11. அகம், புறம்
12. பாரத ரத்னா

13. நெற்கதிர்
14. எருமை
15. அழகு
16. மணம்

(17 – 20 பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)
17. இந்திய அரசு அம்பேத்கருக்கு வழங்கிய விருது எது?
18. சேக்கிழார் பெருமான் அருளிய நூல் எது?
19. படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
20. பழமையான இலக்கண நூல் எது?

21. 1. ஒழுக்கம் 2. எல்லாச் சிறப்புகளையும் தருகிறது.
22. 1. அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும் 2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
3. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்.

23. 1. குடும்ப விளக்கு 2. இருண்ட வீடு
3. தமிழியக்கம் 4. பாண்டியன் பரிசு 5. அழகின் சிரிப்பு

24. 1. வெண்பா 2. ஆசிரியப்பா 3. கலிப்பா 4. வஞ்சிப்பா

25. 1. சான்றோருடன் சேர்வர்

26. 1. வறுமையினால் தமிழன் ஒருவன் கல்லாத நிலை ஏற்படுமானால்
2. இங்குள்ளோர் நாணம் அடைதல் வேண்டும்.

27. 1. அப்பூதியடிகள் 2. திருநாவுக்கரசரிடம் கூறியது.

28. 1. இன்றைய மொழியியல் வல்லுநர்கள்
2. பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது.

29. 1. எடுத்தல் 2. தொடுத்தல் 3. முடித்தல்
(தொடக்கம், இடைப்பகுதி, முடிவு)

30. 1. ஒரு மொழிப் படத்தை 2. மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறை

31. 1. பகுத்தறிவுத் துறையில் அவருக்கு இணை அவரே.
2. ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்.

32. 1. குமரி மலைப்பகுதி 2. பஃறுளி ஆறு

33. 1. ஒழுக்கம் என்பதும் கற்பு என்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும்

34. 1. பட்டினப்பாலை 2. மதுரைக்காஞ்சி

35. 1. பக்தி பரவசத்தால் உடலில் வியர்வைத் தோன்றியது.
2. உடல் நடுங்கியது.
3. கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.
4. உள்ளம் வெதும்பியது.
5. பொய்ப் பொருளை விலக்கி, மெய்ப்பொருளை நினைத்து வணங்கினேன்.
6. உன் அடியவர்களுள் ஒருவனாக என்னையும் ஏற்றுக்கொள்வாயாக.

36. 1. புறாவின் துன்பத்தைப் போக்கியவன் சிபி மன்னன்
2. பசுவின் துயரை அறிந்து தன் ஒப்பற்ற மகனையே தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்றவன் மனுநீதிச்சோழன்.
3. பழியில்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றியவன் மாசாத்துவான்.
4. பெரும் புகழுடைய நகரம் புகார் நகரம்.

37. 1. அன்பு உள்ளத்துடன் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைப்பதற்கு அரியன.
2. அமுதத்தைவிடச் சிறந்தன.
3. எத்தகையனவாய் இருப்பினும் அன்பு கலந்ததால் தூய்மையானவையே!
4. நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம்.

38. 1. பொன், பவளம், முத்து, மாணிக்கம் வெவ்வேறு இடங்களில் தோன்றுகின்றன மாலையாகக் கோர்க்கும்போது தம்முள் ஒருங்கு சேரும்.
2. அது போல சான்றோர் என்றும் சான்றோருடனே நட்பு கொள்வர்
3. சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர்.

39. 1. அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும்
2. யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் அரசர் முன் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று. அஃது முன்வினைப் பயனே.
3. தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காப்பதே
4. செல்வமெனச் சான்றோர் கூறுவர்

40. 1. கேட்போரைத் தன்வயப்படுத்தும் முறையில் தொடங்குதல் வேண்டும்.
2. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்குதல் வேண்டும்.
3. ஓரிரு மணித்துளிகளில் பொருளில் புகுந்துவிட வேண்டும்
4. இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப அமைதல் வேண்டும்.

41. 1. பெண்கள் கல்வி பெறுவது அவர்களது உரிமை.
2. பெண்கல்வி சமூக மாற்றத்திற்கு இன்றியமையாதது.
3. ஆண்கள் பெண்களைப் படிக்கவைக்க வேண்டும்.
4. உலகப்படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும்.
5. பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும்.

42. 1. ஒவ்வொருவரும் முழு மனித நிலை அடைய கல்வி, செல்வம், உழைப்பு மூன்றும் தேவைப்படுகின்றன.
    2. செல்வமும், உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம்.
    3. கற்பித்தல் அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்.
    4. 1946-ஆம் ஆண்டு மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார்.
    5. மும்பையில் சித்தார்த்தா உயர்கல்வி நிலையம் தொடங்கப்பட்டது.

43. 1. தமிழர்கள் கடல் வாணிகத்தில் தலைசிறந்திருந்தனர்.
    2. பொன்னும், முத்தும், துகிலும் கொண்டு கடல் வாணிகம் செய்தனர்.
    3. கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுடன் அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்டன.
    4. அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருட்களும் அனுப்பப்பட்டன.
    5. சாவக நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன.

44. 1. தமிழ்மொழியின் இலக்கண அமைப்பு தனிச்சிறப்பையுடையது, அறிவை உண்டாக்க வல்லது.
    2. தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பதை உண்டாக்கும் என்பார் கெல்லட்.
    3. பழைமையான நூல் தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றிற்கும் இலக்கணம் கூறுகின்றது.
    4. அகத்தியர் - அகத்தியம் என்ற இலக்கண நூலை எழுதினார். இவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் விளக்குகிறது.

45. 1. புறநானூறு 2. கண்ணகனார் 3. சான்றோருடன்
    4. மாலை 5. பொன், பவளம், முத்து, மாணிக்கம்

46. 1. மராட்டிய மாநிலம் 2. தந்தையார் ராம்ஜி சக்பால், தாயார் பீமாபாய்
    3. பீமாராவ் ராம்ஜி (அல்லது) பீம் 4. மகாபாரதம் 5. பீமனைப்போல்

47. அ. 1. ஒழுக்கம் எல்லோருக்கும் சிறப்பைக் கொடுக்கும். எனவே ஒழுக்கத்தை உயிரினும் மேலாய்க் காக்க வேண்டும்.
    2. ஒழுக்கம் உடையவர் உயர்குடிப்பிறந்தவராகவும் ஒழுக்கம் தவறியவர் தாழ்ந்த குடியில் பிறந்தவராகவும் கருதப்படுவர்
    3. ஒழுக்கம் தவறினால் மீண்டும் ஒழுக்கமுடையவர் எனப்போற்றப்படுவது மிகவும் கடினம்.
    4. கற்ற கல்வியினும் ஒழுக்கமே மேலானது.
    5. ஒழுக்கம் கெட்டவனிடத்தில் பெருமை நிற்காது.
    6. மனவலிமை உடையவர் ஒழுக்கத்தினின்றும் சிறிதும் தளர்ச்சி அடையார்.
    7. நல்லொழுக்கத்தாலே எல்லோரும் உயர்வு அடைவர், ஒழுக்கம் தவறியவர் பெரும்பழியை அடைவர்.
    8. நல்லொழுக்கம் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை உண்டாக்கும்.

47. ஆ. 1. அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை தமது இல்லத்தில் அமுதுண்ண வேண்ட திருநாவுக்கரசர் இசைந்தார்.
    2. அப்பூதியடிகளும் அவரது மனைவியும், இணைந்து உணவு தயார் செய்தனர்.
    3. வாழைக்குருத்து அரிந்துவர தன் மகனை அனுப்பினார். அப்பொழுது பாம்பு தீண்டி இறந்தார்.
    4. மகன் இறந்தது திருநாவுக்கரசருக்கு தெரிந்தால் உணவு உண்ணமாட்டார் என, மகனின் உடலை மறைத்து வைத்து அவருக்கு அமுது படைத்தார்.
    5. நாவுக்கரசர் திருநீறு வழங்கிய போது, மூத்த மகனுக்கும் திருநீறு வழங்கும் பொருட்டு அழைத்து வரும்படி கூறினார்.
    6. அப்பூதியடிகள் இப்போது இங்கு அவன் உதவான் எனக் கூறி மறுத்துவிட்டார்.
    7. நாவுக்கரசர் உண்மையை தெரிந்துக்கொண்டு பதிகம் பாடி மூத்த திருநாவுக்கரசை உயிர்த்தெழச்செய்தார்.

48. அ. 1. தொன்மை :

முதன் மாந்தன் தோன்றிய இடம் குமரிக்கண்டம். அவன் பேசிய மொழி தமிழ் மொழி.

2. தனித்தன்மை :

இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளை கொண்டது. இறவா, இலக்கண இலக்கிய வளம் கொண்டது.

3. இலக்கணச் சிறப்பு, இலக்கிய வளம்

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், அகத்தியம்

4. பொதுமைப்பண்பு :

தமிழர் தமக்கென வாழாது, பிறர்க்கென வாழும் பொதுப்பண்புடன் வாழ்கின்றனர்.

5. நடுநிலைமை :

தமிழ் இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை, நடுநிலைமையானவை.

(வேறு பொருத்தமான தலைப்புகளில் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கவும்)

48. ஆ. 1. எடுத்தல், தொடுத்தல் மற்றும் முடித்தல் என்பன பேச்சின் முக்கூறுகள் ஆகும்.
2. கேட்போரை தன்வயப்படுத்தும் முறையில் தொடங்குதல் வேண்டும்.
3. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்குதல் வேண்டும்.
4. ஓரிரு மணித்துளிகளில் பொருளில் புகுந்துவிட வேண்டும்
5. இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப அமைதல் வேண்டும்.
6. நிரல்பட, திறம்பட, தெளிவாக, உணர்ச்சி ஒளிமின்ன, ஊக்கம் துடிக்க பேச வேண்டும்.
7. சொல்ல வேண்டிய கருத்துக்களை வரிசைப்படுத்தி, கேட்போர் மகிழும்படி பேச வேண்டும்.
8. பேச்சை முடிக்கும்போது கேட்போர் மனதில் பதியுமாறு சுருக்கக்கூறி முடிக்க வேண்டும்.

49. அ. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

ஆ. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

- திருவள்ளுவர்

இ. மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுக்கொள்ளே

- மாணிக்கவாசகர்

ஈ. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

- கம்பர்



ஆ. பன்னீர் செல்வம்
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 9940731517
மின்னஞ்சல் : inikavi117@gmail.com